[21st March 1959

50 சதவிகிதம் நெசவாளர்களை சேர்த்து விடவேண்டும் என்பதுதான் இப்போதுள்ள திட்டம். எல்லோரும் இப்போது சேர்ந்துவிட்டால்கூட எல்லோருக்கும் வேண்டிய வசதிகளை செய்து கொடுத்துவிடமுடியாது. இருந்தாலும் அதிகமாக நெசவாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் சேரவில்லை என்று சொல்வது சரியான புள்ளி விவரம் அல்ல அது தவறு, என்பதையும் சொல்லிகொள்கிறேன்.

Sri S. M. ANNAMALAI : ஸார், கைத்தறி நெசவாளர்களுக்கு புது மாதிரியான தறிகள் வாங்கவேண்டுமென்று சென்ற ஆண்டில் 5·58 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்தும், அதில் மிச்சமாக 5·41 லட்சம் ரூபாய் இருப்பதாக தெரிகிறது. இதிலிருந்து 17 ஆயிரம் ரூபாய்தான் செலவு செய்திருப்பதாக தெரிகிறது. ஏனென்றால் சர்க்காரிலிருந்து உதவி கொடுத்தாலும் புது விதமான தறிகளை அமைக்கவேண்டுமானால் கூடுதலாக 150 ரூபாய் செலவு செய்யவேண்டியிருக்கிறது என்று அமைச்சர் அவர்களே தெரிவித்தார்கள். ஆகவே அந்த 150 ரூபாயும் சேர்த்து கொடுப்பதற்கு சர்க்கார் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : நேற்று இதைப்பற்றி முழுக்க முழுக்க விவாதம் நடந்தது. சர்க்கார் புதுமாதிரியான உபகரணங்கள் வாங்கி கொடுத்தால் கூட அதை நெசவாளர்கள் ஏற்றுக்கொள்ளாமல் பழைய முறைகளையே ஏற்றுக்கொள்கிறார்கள். இந்த நிலையில் நேற்று கனம் அங்கத்தினர் மாரியப்பன் அவர்கள் சொன்னது மாதிரி இப்போதிருப்பதை அதிகப்படுத்தி 200 ரூபாயாக கொடுத்தாலும், இந்த ரூபாய்க்கும் புது உபகரணங்களை வாங்கி மூலையில்தான் போட வேண்டிய நிலை ஏற்படுமோ என்று நான் நினைக்கிறேன்.

Mr. SPEAKER : நானும்கூட நினைக்கிறேன், நேற்றுதான் இதைப்பற்றி அதிகமான அளவில் விவாதம் நடத்தியாய் விட்டதே, இப்போது அதன் பேரில் அதிகமான உபகேள்விகள் கேட்பதின் அவசியம் என்னவென்று தெரியவில்லை. (சிரிப்பு)

Sugarcane

* 929 *Q.*—Sri N. K. PALANISAMI (on behalf of Sri M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the basis on which the price of sugarcane is fixed for supply to the sugar factories in Pugalur and Pettavaithalai in Tiruchirappalli district; and

(*b*) whether there is any proposal to review the same?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The minimum price of sugarcane to be paid by the sugar factories for the sugarcane purchased by them is fixed by the Government of India.

(*b*) A proposal for revision is under consideration.

Sri A. GOVINDASAMY : இப்போது கரும்பின் விலையை நிர்ணயம் செய்கின்ற அதிகாரம் மத்திய சர்க்காரின் கையில் இருந்து வருவதால் நமது நாட்டில் உற்பத்தியாகின்ற கரும்புக்கு உற்பத்தி சிலவு அளவுக்கு போதுமான விலை கிடைக்காமல் கரும்பு விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? ஆகவே ராஜ்ய சர்க்காரே இந்த விலை நிர்ணயம் செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

21st March 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது கையாளப்படுவது "ஷிலேமா" பார்முலா. அதன் பிரகாரம்தான் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. மேலும் வாலண்டரி பேஷிஸில்தான் இப்போதுள்ள விலை அமுலில் இருந்துவருகிறது. இதனுல் அதிகமாக கரும்புகளை வாங்கிக்கொள்ளும் பாக்டரிகளிடமிருந்து இதற்கு எதிர்ப்பு ஒன்றும் வருவதாக தெரியவில்லை. இதனுல் விவசாயிகளுக்கு கஷ்டமொன்றுமிருப்பதாகத் தெரியவில்லை.

SRI A. GOVINDASAMY : ஸார், சர்க்கரை விலை ஏறியிருக்கிற அளவுக்கு கரும்பின் விலை உயரவில்லை, சர்க்கரை விலை அதிகமாக உயர்ந்திருப்பதற்கு தகுந்தவாறு கரும்பின் விலையையும் உயர்த்துவதற்கு மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இங்குள்ள நிலைமைகளைப் பற்றி இந்த சர்க்கார் மத்திய சர்க்காருக்கு தெரிவிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போதுள்ள விலை வாசிப்படி விலை நிர்ணயம் செய்வதில் இப்போதுள்ள முறையை மாற்றி அமைக்கவேண்டுமென்று ஒரு யோசனை கூறப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருந்து வருவதாகச் சொன்னேன். சர்க்கரை விலை ஏறிக்கொண்டே இருந்தால் அதற்கு தகுந்தபடி கரும்பின் விலையையும் உயர்த்திக்கொண்டே இருக்கமுடியாது. சர்க்கரை விலையை ஓரளவு குறைக்கத்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

Supply of milk in the City

* 930 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken to improve the supply of milk in the Madras City in 1958?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement[a] is placed on the table of the House.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that the price of milk is still beyond the reach of the poor children?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am quite well aware of that and, therefore, I am myself taking whatever steps that are possible to make milk available to all people.

SRI S. M. ANNAMALAI : ஸார் இந்த அறிக்கையில் 1957-ல் 7,514 படியாகவும், 1958-ல் 7,557 படியாகவும், 43 படிதான் அதிகரிக்க ஒரு ஆண்டில் உற்பத்தி செய்ய முடிந்திருக்கிறது. மேலும் அதிகமாக்க சர்க்கார் என்ன திட்டங்களை வைத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது கூட்டுறவு சங்கங்கள் மூலம் சில ஸ்தாபனங்கள் மூலம் உற்பத்தி ஆகக் கூடியதைப்பற்றித்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதல்லாமலும் பால் உற்பத்தி ஆகிவருகிறது.

SRI S. NAGARAJA MONIGAR : நகரத்திற்கு உண்டான திட்டங்களைப் போன்று இதர பாகங்களுக்கும் பால் அபிவிருத்தித் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கூட்டுறவு சங்கங்கள் முன் வந்தால் வேண்டிய உதவி அளிக்கலாம்.

SRI A. GOVINDASAMY கூட்டுறவு சங்கங்கள் மூலம் மாடு வாங்க கடனாகப் பணம் வாங்கி, வாங்கிய மாட்டுக்கு சாதாரணமாக மாடுகளுக்கு ஏற்படுகிற வியாதி வந்து இறந்து விடுகிற போது, மாடுகளை வாங்கிப் பரா

[a] Printed as Appendix on page 280 infra.